எ DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: CRLMP. No.467 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செய்யது அப்தாகிர் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.சுலைமான் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 09.12.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னையில் ஒரு உணவகத்தில் வேலை பார்த்து வருகிறேன். புகார்தாரர் சுலைமான் எனது தந்தைதான். கடந்த 30.01.2023 தேதி கவலைவென்றானில் உள்ள எங்களது சொந்தமான வயலில் நானும் எனது தந்தையும் அறுவடைசெய்து கொண்டிருந்தோம். அப்போது மாலை சுமார் 5.30 மணியளவில் ரகுமத்பீவி, நசிர்அகமது, சீனிமுகமது, ஒலிமுகமது, ஆயிஷாபீவி, ரோஷ்னாபானு, சமது, பிரான்மலை, பாபாஉசேன், சமுத்பீவி, செய்னபு பீவி, ராசாமுகமது, ரசியாபானு,

நூர்முகமது, அன்சார், சகுபர், செகரத் ஆகியோர் எங்கள் வயலுக்குள் அத்துமீறி நுழைந்து என்னையும் எனது தந்தையையும் சீனிமுகமத்,நசிர்அகமத் ஆகியோர் அருவாளை கொண்டு மிரட்டினர், பாபாஉசேன் கத்தியை கொண்டு மிரட்டி எனது தந்தையை குத்த வந்தார். நான் தடுத்து விட்டேன். மேலும் பிற ஆண்நபர்கள் கம்பு கட்டையை கொண்டு வந்தனர். பெண் நபர்கள் கையில் மிளகாய் பொடியை கொண்டு வந்து அனைவரும் எங்களை மிரட்டி தகாத வார்த்தைகளால் பேசி அவனைவரும் சேர்ந்து என்னையும் எனது தந்தையையும் அடித்து உங்களை உயிரோடு விடமாட்டோம் என மிரட்டினார்கள்.

2. அதன்பின் எனது தந்தை சுலைமான் காவல்நிலையம் சென்று புகார் தெரிவித்தார்.காவல் நிலையத்தில் புகாரை பெறாததால் நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்று முதல் தகவல்அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது. சம்பவமானது நடைபெற்றபோது நானும் சம்பவயிடத்தில் எனது தந்தையுடன் இருந்தேன். முதல் தகவல் அறிக்கையானது சம்பவத்தில் ஈடுபட்ட 17 நபர்கள் மேல் பதியப்பட்டது. ஆனால் 10 நபர்களை நீக்கிவிட்டார்கள். மேற்படி 17 நபர்களும் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதால் நீக்கம் செய்யப்பட்ட நபர்களை இவ்வழக்கில் சேர்க்கும்படி பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

**நீதிமன்ற கேள்வி**

கேள்வி – மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும 17 நபர்களும் எனது உறவினர்களா என்றால்?

பதில்– இல்லை, எனது ஊர்க்காரர்கள் தான்.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.